முருகப்பெருமான் துணை

**மகான் ஜனாதனர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.07.2023, திங்கட்கிழமை

1. மக்களை ஞான வழிநடத்த
மாதவசியாக வந்த அரங்கனே
பக்குவம் தயவு சிந்தை வளர
பாமரர்க்கும் எளிமைபட அருளும்
2. அருளும் ஆறுமுக ஞானியே
அரங்கனே உன் பெருமை கூறி
வரமென சோபகிருது மிதுன திங்கள்
வல்லமைபட மூவாறுதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 18ம் நாள், 03.07.2023, திங்கட்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசி
வழங்குவேன் ஜனாதனர் யானும்
சோரமின்றி மக்கள் குலம்தழைக்க
சுத்த சன்மார்க்க நெறிபரவ உரைப்பேன்
4. உரைக்கவே உயிர்கொலை நீக்கி
உலகோர் பிறஉயிர்களை மதித்து
குறைவின்றி அறத்துடன் வாழ
குருவரங்கன் காட்டும் உண்மை
5. உண்மை வழிகளை ஏற்று
உலகோர் பின்பற்றி வர
நன்மை அடைந்திடும் வண்ணம்
ஞானமும் கூடி உலகமக்களுக்கு
6. மக்களுக்கு அரங்கன் வழி
மாதவபலம் வரமாகக் கிட்டி
ஆக்கமுடன் உலகை வெல்லும்
ஆற்றலும் சக்தியும் கைகூடும்

7. கூடவே அவதார ஞானி
குருவருளால் உலகம் தனில்
ஈடேறும் எங்கும் சன்மார்க்கம்
இணையிலா வேதமாக நிரம்பி
8. நிரம்பியே உலகம் எங்கிலும்
நியாயம் தருமம் காக்கும்
வரம்பு கொண்டு வழிநடத்தும்
வல்லமையான ஆளுமைகள் தானும்
9. தானுமே கூடிச் சிறந்து
தவராஜன் வந்த நோக்கமான
ஞானத் தலைமைகள் ஆசி
ஞானிகள் வெளிப்படும் வண்ணம்
10. வண்ணமுடன் ஞான ஆட்சி
வந்தடையும் உலகம் தன்னில்
எண்ணம் தெளிவு திடம் கொண்ட
ஏழ்மை வறுமை அகற்றி
11. அகற்றிக் காக்கும் ஆளுமையாக
ஆறுமுகனார் தலைமை ஏற்று
செகமாற்றம் புரியும் சக்தியாகவே
செப்பிடுவேன் அரங்கன்படைகள் அற்புதம்புரியும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–